OS: 656/2018

Date:10.09.2025

பெயர் : ராஜா **(பி.வா.சா.1) ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>**மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு வாதி** தரப்பில் குறுக்கு விசாரணை **:-**</u>

1. வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதாக நான் ஏற்கனவே எதிர்வாதம் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ள நிலையில் எப்போது வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதாக சொல்கிறேன் என்றால் 1933 ம் ஆண்டுக்கு முன்பே ஏற்பட்டுவிட்டது. 1933 ம் ஆண்டுக்கு முன்னர் யார் யாருக்கு இடையே வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதாக சொல்கிறேன் என்றால் வாதியின் தாத்தா சின்னபையன் அவர்களுக்கும், எனது தாத்தா முருகனுக்கும் ஏற்பட்டது.

2. வாய்மொழி பாகப்பிரிவினையில் முருகனுக்கு எவ்வளவு பாகம் பிரித்து கொடுக்கபட்டது என்றாலும், சின்னபையனுக்கு எவ்வளவு பாகம் பிரித்து கொடுக்கப்பட்டது என்றாலும் யு.டி.ஆர் பட்டாவில் இருந்ததையே தான் அப்போது பிரித்து கொள்ளப்பட்டது. 1933 ம் ஆண்டு வாய்மொழிபாகப்பிரிவினையில் வந்த சொத்துக்களுக்கு பட்டா வழங்ககோரி எனது தாத்தா வருவாய் துறையில் மனு கொடுத்து நடவடிக்கை எடுத்தாரா என்றால் எனக்கு தெரியவில்லை. என் தாத்தாவுக்கு பிரிந்த பாகத்தை என் பாட்டி அய்யம்மாளுக்கு தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்து என் பாட்டி பெயரில் பட்டா இருக்கிறது.

3. 1933 ம் ஆண்டு என் பாட்டி பெயருக்கு செட்டில் மெண்ட் பத்திரம் எழுதி வைக்கப்பட்ட பின்னர் அந்த சொத்திற்கான பட்டாவை என் பாட்டி பெயருக்கு மாற்றுவதற்கு ஏதாவது மனு தாக்கல் செய்யப்பட்டு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை ஆனால் செட்டில்மெண்ட்க்கு பின்னர் வருவாய் துறையினரே என் பாட்டிக்கு பட்டா கொடுத்துவிட்டார்கள். என் பாட்டி பெயருக்கு வருவாய் துறையினர் அந்த ஆண்டு பட்டா கொடுத்தார்கள் என்றால் எனக்கு நினைவில்லை.

4. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 ஆவணம் 05.08.1983 ம் வருடத்தில் யு.டி.ஆர்-க்கு பின்னிட்டு கொடுக்கப்பட்டது என்றால் தேதி நினைவில்லை ஆனால் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த பட்டாவில் விஸ்தீரணம் 69.5.0 ஏர்ஸ் என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றாலும், ஆனால் செட்டில்மெண்ட் பத்திரத்தில் 1.12.50

ஏக்கர் என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் பட்டாவில் உள்ள விஸ்தீரணம் தான் செட்டில்மெண்டிலும் உள்ளது.

5. பட்டாவில் இருக்கும் விஸ்தீரணமும், செட்டில்மெண்டில் இருக்கும் விஸ்தீரணமும் ஒன்ரே என்று சொல்வது பொய் என்றாலும், பட்டாவில் 1 ஏக்கர் 73 செண்ட் என்று விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டிருகிறது என்றாலும், ஆனால் செட்டில்மெண்ட் பத்திரத்தில் 1 ஏக்கர் 12 1/2 செண்ட் என்று குறிப்பிடப்பட்டிருகிறது என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் செட்டில்மெண்ட் ஆவணத்திற்கும், பி.வா.சா.ஆ.2 பட்டா, பி.வா.சா.ஆ.7 கணினி பட்டா ஆகியவைகளுக்கும் எந்த சம்மதமும் இல்லை என்றாலும் சரியல்ல.

6. வாய்மொழி பாகப்பிரிவினையில் தனக்கு வந்த சொத்தை செட்டில்மெண்ட் எழுதி வைப்பதாக செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிடபடவில்லை என்றாலும், தனக்கு கிரையப்படி பாத்தியப்பட்ட சொத்தை தான் செட்டில்மெண்ட் எழுதி வைப்பதாக பி.வா.சா.ஆ.1 ஆவணமான செட்டில் மெண்ட் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருகிறது என்றால் சரியல்ல. வாய்மொழி பாகப்பிரிவினையில் வந்த சொத்தை தான் செட்டில்மெண்ட் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது.

7. நான் சொல்வது போல எந்த காலத்திலும், சின்னபையனுக்கும், முருகனுக்கும் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. முருகனுக்கே சொத்து பாகப்பிரிவினை மூலமாக கிடைக்கபெறாத நிலையில் அந்த சொத்து குறித்து தான செட்டில்மெண்ட் எழுதி வைக்க முருகனுக்கு சட்டப்படியாக எந்த உரிமையும் இல்லை என்பதால் அந்த தான செட்டில்மெண்ட் ஆவணமே செல்லதகாத ஆவணம் என்றால் சரியல்ல.

8. அதனால் தான் செட்டில்மெண்ட் ஆவணம் அமலுக்கு வரவில்லை என்றாலும், பட்டாவும் கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல்செய்துள்ள யு.டி.ஆர் பட்டாவானது எந்த ஆவணத்தையும் ஆதரமாக கொள்ளாமல் யு.டி.ஆர் பட்டா நடவடிக்கையில் போது யார் யார் அனுபவத்தில் இருப்பதாக வாய்மொழியாக சொன்னார்களோ அதன் அடிப்படையில் யு.டி.ஆர் பட்டா கொடுக்கப்பட்டிருப்பதால் அந்த யு.டி.ஆர் பட்டாவே ஆட்சேபனைக்குரியது என்றால் சரியல்ல.

9. 1ம் பிரதிவாதி வீரமுத்து பெயருக்கு 163 என்ற யு.டி.ஆர் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். மேற்படி பட்டாவில் 38.5 ஏர்ஸ் நிலம் மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் எனக்கு தெரியாது. வாதி சண்முகம் அவர்களின்

அப்பா கந்தசாமி பெயரில் 27, 43 என்ற இரண்டு யு.டி.ஆர் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். ஆனால் 3 சர்வே எண்களை வழக்கில் காட்டவில்லை. 37/13, 35/7, 35/18AK என்ற சர்வே எண்களை வழக்கில் காட்டவில்லை.

10. தாவா சொத்துக்கள் மட்டுமே பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் அதை பொறுத்து மட்டுமே வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றாலும் மேற்கண்ட நான் சொல்லும் 37/13, 35/7, 35/18AK சர்வே எண்கள் குடும்ப சொத்துக்கள் இல்லை என்பதால் காட்டவில்லை என்றால் சரியல்ல. மேற்கண்டவைகளும் அவர் அனுபவத்தில் இருந்துவரும் பூர்வீக சொத்துக்கள் தான். மேற்கண்ட 27, 43, 163 ஆகிய 3 பட்டாக்களிலும் 57 ஏர்ஸ் தான் யு.டி.ஆர் பட்டாவில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். ஆனால் மேற்கண்ட 37/13, 35/7, 35/18AK சர்வே எண்களின் விஸ்தீரணத்தை கூட்டினால் அளவு மாறும்.

11. யு.டி.ஆர் பட்டாவில் உள்ள பெயர்களின்படி பட்டாதாரர்கள் அனுபவத்தில் இல்லை என்றாலும், அய்யம்மாள் பெயரில் உள்ள பட்டாவில் உள்ள பூமியின் ஒரு பகுதியை வாதி அனுபவம் செய்து வருகிறார் என்றாலும், கந்தசாமி பெயரில் உள்ள பட்டாவில் உள்ள பூமியின் ஒரு பகுதியை வீரமுத்து அனுபவித்து வருகிறார் என்றாலும், வீரமுத்து பெயரில் உள்ள பட்டாவில் உள்ள பூமியின் ஒரு பகுதியை கந்தசாமி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. எனவே 4 பட்டாக்களும் ஆட்சேபனைக்கு உட்பட்டது என்றால் சரியல்ல. 4 பட்டாக்களில் உள்ள அளவுகளின் படி யாரும் அனுபவித்து வராததால் பொதுவில் பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம் என்று வாதியின் தகப்பனார் கந்தசாமி இந்த தாவாவை தாக்கல் செய்வதற்கு முன்பு ஊர் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் என் அப்பா மற்றும் வீரமுத்து ஆகியோர்கள் கலந்து கொண்டு பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் பாகம் பிரிப்பது சம்மந்தமாக எந்த பஞ்சாயத்தும் நடக்கவில்லை.

12. நான் வழக்கிற்காக பஞ்சாயத்து நடக்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், பஞ்சாயத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி பாகம் பிரித்து கொள்வதற்கு முன்னர் வாதியின் தகப்பனார் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. கந்தசாமி இறந்தபின்னர் அவரது மகனான வாதி பஞ்சாயத்தார்கள் மூலம் பாகம் பிரிப்பதற்காக எங்களிடம் கேட்டார் என்றால் அவ்வாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை. யு.டி.ஆர் பட்டாவை இரத்து செய்துவிட்டு பாகம் பிரித்து கொள்ள முடிவு

செய்ததால்தான் யு.டி.ஆர் பட்டாவை ரத்து செய்ய சொல்லி வாதி வருவாய் துறையில் மனு கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல.

13. வாதி கொடுத்த மனுவின் படி வருவாய் துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.31/7 ல் நீங்கள் வீடு கட்டுவதற்காக கல், மணல், கம்பி போன்ற கட்டுமான பொருட்களை போட்டோம் என்றால் சரியல்ல. அவ்வாறு பொருட்களை மேற்கண்ட சர்வே எண்ணில் உள்ள பூமியில் போட்டு வீடு கட்ட முயற்சித்த போதும், வாதி பஞ்சாயத்தார்கள் மூலம் பாகம் பிரித்து கொள்ள எங்களை அழைத்தார் என்றால் சரியல்ல. வழக்கு போடுவதற்கு முன்பே நான் வீடு கட்டு அதில் குடியிருக்கிறன்.

14. நான் வீடு கட்டி குடியிருப்பது உண்மை என்றாலும், கூடுதலாக கட்டிடம் கட்ட பொருட்களை மேற்படி சர்வே எண்ணில் வைத்தேன் என்றாலும் அப்போது பஞ்சாயத்தார் மூலம் வாதி கேட்டார் என்றாலும், அதையும் மீறி நான் கூடுதல் கட்டிடம் கட்டினேன் என்றாலும் சரியல்ல. பின்னிட்டு 10.11.2010ம் தேதி இறுதியாக என் தகப்பனாரிடம் பேசியப்படி பாகப்பிரிவினை செய்துகொள்ள வாதி கேட்டபோது நான் மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

15. நான் பஞ்சாயத்துப்படி பாகப்பிரிவினைக்கு ஒத்துக்கொள்ளாததால்தான் வாதி பாகப்பிரிவினைக்காகவும், யு.டி.ஆர் பட்டாவை இரத்து செய்வதற்காகவும் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றாலும் எனவே வழக்குபடி தீர்வாகவேண்டும் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

(ஒப்பம்/-T.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.